குறள் மலர்

திருக்குறள் விளக்கம்

மாலை-1 | விசுவாவசு; மார்கழி-தை | மலர்-7

7. மக்கட்பேறு.

1. பெறும் அவற்றுள் யாம் அறிவது இல்லை அறிவு அறிந்த
மக்கட்பேறு அல்ல பிற. (61)

2. எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின். (62)

3. தம்பொருள் என்பதம் மக்கள்; அவர்பொருள்
தம்தம் வினையான் வரும். (63)

4. அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ். (64)

5. மக்கள்மெய் தீண்டல் உடற்குஇன்பம்; மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு. (65)

6. 'குழல்இனிது; யாழ்இனிது' என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர். (66)

7. தந்தை மகற்குஆற்றும் நன்றி, அவையத்து
முந்தி இருப்பச் செயல். (67)

8. தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன் உயிர்க்கு எல்லாம் இனிது. (68)

9. ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும், தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். (69)

10. மகன் தந்தைக்கு ஆற்றும்உதவி 'இவன்தந்தை
என்நோற்றான் கொல்!' எனும்சொல். (70)

நன்றி.

திருக்குறளின் ஏழாம் அதிகாரமாகிய, மக்கட்பேறு எனும் அதிகாரத்தின் பத்து குறட்பாக்களுக்கும் தமிழறிஞர்கள் பதின்மர் நல்விளக்கம் தந்தருளியுள்ளனர். அப்பெரியார்களுக்கு எம் உளங்கனிந்த நன்றி உரித்தாகிறது. இனி அடுத்து வரும் குறள்மலர்கள் காலந்தாழ்த்தாது, உரியகாலத்தில் வெளிவர ஏற்பாடுகள் செய்து வருகிறோம். இறையருள் கூட்டுவிக்க இறைஞ்சுகின்றோம்.

எமக்கும் ஓர் பாராட்டு!

ஆழி சூழுலகையும் அண்ட சராசரங்களையும் அளித்துக் காத்தருளும் அப்பரம்பொருளின் கையில் அடியேன் ஓர் சிறு துரும்பு. அவனருளை முன்னிட்டு அடியேன் துணிந்து மேற்கொண்டுள்ள திருக்குறட்பணி-தமிழ்ப்பணி மிகப்பெரிது. அடியேனின் ஆற்றல் மிகச்சிறிது. தமிழ்த்துறை போய பேரறிஞர் பலர் எம்மை இத்துறையில் ஊக்குவிக்கும் முகத்தான் வர விடுக்கும் பாராட்டு-வாழ்த்துக் கடிதங்கள் பல. அப்பெரியார்கள் அளித்தருளும் பேராதரவே இச்சிரமமான பணியின் சிரமங்களை வெல்லுதற்கு எமக்கு ஊக்கந்தருவன.

இந்நிலையில் அன்பர்கள் பலர் கூடி, கடந்த கார்த்திகைத் தீபபிரம்மோற்சவத் துவக்க நாளான 28--11--1965, ஞாயிறு அன்று, இவண்நந்திதுருகம் வட்டாரத்தில் 'மில் பிளாக்-சைனுட் லைனில் எழுந்தருளியிருக்கும் தண்டமிழ் முருகக்கடவுளின் சந்நிதியில் விழாவமைந்து-சுரங்கப்பேரதிகாரியும், பெருங்கல்வித்துறைபோய பேரறிஞரும், திருக்குறள் அன்பரும், நம் 'குறள் மல'ரின் பேராதரவாளருமான உயர்திரு வி. எம். சுந்தரராஜன் எம். ஏ., எம். எஸ்ஸி (லண்டன்) எம். ஐ. எம். எம். அவர்களைக்கொண்டு, ஆலயம், பொதுமக்களின் சார்பில் அடியேனுக்குத் '**திருக்குறள் மணி; நாவலர்**' எனுஞ் சிறப்புப்பட்டங்கள் ஈந்து, பொன்னுடை போர்த்தினர். அன்பு முதிர்ச்சியால் அன்பர்களும், விழாத்தலைவர் திரு. சுந்தரராஜன் அவர்களும், அடியேனுக்கு இச்சிறப்புக்களை வழங்கினர். இச்சிறப்புக்களை ஏற்கும் தகுதி சிறிதும் அடியனேற்கிலது. 'தமிழ்ப்பணியும்-குறட்பணியும் தாராது ஆற்றி வருக' என திருமுருகனின் முன்னிலையில் எமக்கு ஆணையிட்டருளியதாகவே இச்சிறப்பினைக் கருதுகின்றேன் யான். ஆணையைச் சிரமேற்கொண்டொழுகும் தகுதியும், வாய்ப்பும் அடியனேற்குக் கிட்டுமாறு திருவருள் புரிந்தருள்க என எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

இவ்விழாவினையடுத்து எமக்கு நேரிலும் கடிதங்கள் வாயிலாகவும் வாழ்த்தும், பாராட்டும் தெரிவித்துள்ளனர். அவர்கள் அனைவருக்கும் எமது அகங்கனிந்த நன்றி. அவர்களனைவரும் நல்வாழ்வு வாழ்ந்து, நற்றமிழ்த் தொண்டியற்றித்திகழ இறை அருள் பாலிக்குமாக.

அன்பின் அடிமை,

அ. இரத்தினசபாபதி.

பெறுமவற்றுள்...

டாக்டர். மெ. சுந்தரம். எம். ஏ; எம். லிட். பி. எச். டி.
தமிழ்ப் பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக் கழகக் கிளை, மதுரை.

குறள்-1. "பெறும் அவற்றுள் யாம்அறிவது இல்லை அறிவுஅறிந்த
மக்கட்பேறு அல்ல பிற" (61)

சொற்பொருள்:- பெறுமவற்றுள் – இல்லறத்தார் பெறுவதாகக் கருதுகின்ற பேறு பலவற்றுள்; அறிவறிந்த-(சிறக்க அமைந்த அறி கருவிகளின் துணையோடு) அறிய வேண்டுவனவற்றை அறிந்து ஒழுகு கின்ற; மக்கட்பேறு-ஆண், பெண் மக்களைப் பெறுதலாகிய தலைமைப் பேறு; அல்ல பிற- அல்லாத பிற பேறுகளை; யாம் அறிவதில்லை-யாம் பெரிதாய் மதிப்பதில்லை.

கருத்து:- இல்லறத்தார் பெறும் பேறுகளுள் மக்கட்பேறே தலைமை சான்றது.

விளக்கம்:- வீடுபேறு என்பது துறவு வழியாகப் பெறும் சிறப்புப் பேருகலின், மக்கட்பேற்றை இல்லற நிலையில் பெறும் தலைமைப் பேரு கக் கொள்ள வேண்டும். இல்லறப்பேறு பதினாறு என்று வகைப் படுத் துவர். அவற்றுள் மக்கட்பேறு தலைமாண்பு உடையது.

"மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத்தாம் வாழுநாளே" (புறம்; 188)

எனப் பிற சான்ளேரும் இதன் சிறப்பை வலியுறுத்துகின்றனர். 'பூ,' – என்றால் தாமரையைக் குறிப்பது போலப் 'பேறு' என்றால், மக்கட் பேற்றையே குறிக்கும். செட்டிநாட்டுப் பகுதியில், இன்றும், குழந்தை பிறந்தமையைக் கேட்பதைப் 'பேறு கேட்டல்' என்றே அழைப்பது இக் கருத்தை வழியுறுத்துகிறது. பேச்சு வழக்கில் அது, 'போறு கேட்டல்' என்று மாறி வழங்குகிறது.

கூன், குருடு, செவிடு, ஊமை முதலிய குறைபாடின்றி அமையும் போதே அறிவறிதல் சிறக்கு மாதலின், மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து அறிகருவிகளும் சிறக்க அமைந்து பிறக்கும் பேறு வேண் டும் என்பது பெறப் படுகிறது. எனவே, அக்கருத்து வருவித்து உரைக் கப் பட்டது.

[பக்கம் நான்கில் காண்க]

எழுபிறப்பும் தீயவை...

செஞ்சொற் கொண்டல்,
வித்துவான். சொ. சிங்காரவேலன். எம். ஏ,
ஆய்வாளர்- மொழியியல் துறை;
அண்ணுமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணுமலை நகர்.

குறள்-2. எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்" (67)

சொற்பொருள்:- பழி பிறங்காப் பண்பு உடை—பழிக்கப்படாத நல்லியல்புகளை உடைய; மக்கட் பெறின்—புதல்வரை (ஒருவன்) பெறுவான் ஆயின்; எழுபிறப்பும்—வினைத்தொடர்பால் பிறக்கும் ஏழு பிறவிகளிலும்; தீயவை—துன்பங்கள்; தீண்டா—(அவனைச்) சென்றுஅடைய மாட்டா...... (என்பது)

[பக்கம் ஐந்தில் காண்க]

[பக்கம் மூன்றின் தொடர்ச்சி]

பிள்ளைகள் அறிவு நிறைந்து விளங்கவேண்டும் என்பார் "அறிவறிந்த' என்ருர். பிசிராந்தையார் தனக்கு நரை தோன்ருமைக்குரிய காரணங்களுள். 'மக்களும் நிரம்பினர்' (புறம்; 191) என்று, அறிவு நிரம்பிய மக்களைக் குறிப்பிடுவது ஈண்டுக் கருதத் தக்கது. 'அறிவறிந்த' என்பதனல், மக்கள் என்னும் பெயர் பெண்ணெழித்து நின்றது" எனப் பரிமேலழகர் உரைப்பது பொருந்தாது. அறிவறிதல் இரு பாலார்க்கும் உரியதே ,அறிவும், அருமையும் பெண்பாலான' (தொல்காப்பியம் பொருள்-15) என்று பெண்களுக்கு அறிவுடைமை வலியுறுத்தப் படுதல் நினைவு கூரத்தக்கது. பெண்பாற் புலவர் பலரும் ஈண்டு நினைக்கத் தக்கவர். எனவே, பரிமேலழகர் உரை, பெண்கள் கற்றற்கு உரியவர் அல்லர் என்ற கருத்து நிலவிய காலத்து, வலிந்து எழுதப்பெற்ற போலி உரை எனக் கொள்ள வேண்டும்.

'யாமறிவது மக்கட் பேறு' என்று கூருமல், 'யாமறிவதில்லை பிற' என்று கூறியிருப்பது, மக்கட் பேற்றின் உயர்வை வலியுறுத்தற்கு என்க. யாம்' என வள்ளுவர், தன்னைப் பன்மையில் உரைப்பது மிகச் சில இடங்களிலேயே ஆகும். ஈண்டு ஒருமையைக் குறித்த தன்மைப் பன்மையாகக் (Royal we) கொள்வதிலும், வள்ளுவரையும் அவர் மனைவியையும் குறித்ததாகக் கொள்ளல் தகும். மக்கட் பேறு, கணவன் மனைவி இருவர்க்கும் உரிய தாகலின், வள்ளுவரும் அவர் மனைவியும் ஒப்ப முடிந்த கருத்து இது. என்று கொள்வதில் தனிச்சிறப்பும் அமைந்திருக்கிறதன்ருே?

Among all the benefits that may be acqired, we know no greater benifit than the acqisition of intelligant children.

(ரெவ; டிரு, ரெவ; லாசரஸ்) ★

தம்பொருள் என்ப..

பேராசிரியர், ந. சுப்பு ரெட்டியர் எம் ஏ; பி. எஸ். ஸி. எல். டி,
தமிழ்த்துறைத் தலைவர்,
திருவேங்கடம் பல்கலைக் கழகம். திருப்பதி.

குறள்-3. "தம்பொருள் என்பதம் மக்கள்; அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்" (63)

சொற்பொருள்:- தம் மக்கள்-தம்முடைய மக்கள்; தம்பொருள் என்ப தம்முடைய செல்வம் என்று சொல்வர்; (பெற்றோர்) அவர் பொருள்-அப்பெற்றோரது செல்வமாகிய மக்கட்பேறு; தம்தம் வினையால் வரும்-அவரவருடைய செயலால் உண்டாகும்.

[பக்கம் ஆறில் காண்க]

[பக்கம் நான்கின் தொடர்ச்சி]

கருத்துரை.- பிறரால் பழிக்கப் பெறுது புகழ்ந்து ஏத்தப்பெறும் நல்லியல்புகளை உடைய நன்மக்கட் பேற்றினால் ஏழு பிறவிகளிலும் துன்பங்கள் தொடராத நற்பயனை ஒருவன் பெறக்கூடும்.

விளக்கவுரை:- இத்திருக்குறள் நன்மக்கட் பேற்றினால் தீவினை (துன்பம்) வளராது தேயும் என்பதனை வற்புறுத்தி உரைக்கின்றது. நல்லாசிரியர் திருவள்ளுவர் பல பிறவிகளில் நம்பிக்கை உடையவர் என்பதை இத்திருநூலின் பிறபகுதிகளிலும் காணலாம். 'எழுபிறப்பு' என்னும் தொடர்க்கு 'வினைவயத்தாற் பிறக்கும் பிறப்பு ஏழு' என்று பொருள் கொண்ட பரிமேழலகர், தேவர், மனிதர், விலங்கு, ஊர்வன, நீர்வாழ்வன, பறப்பன, தாவரம் என்ற ஏழுபிறப்பு என விளக்க ஒரு பழம் பாடலையும் காட்டியுள்ளார். பரிதியார் இக் கருத்துடையரே ஆயினும், 'எழு நரகத்திற் சென்றாலும்' என்னுமொரு கருத்தையும் இதனுடன் இணைத்துள்ளார். மணக்குடவர் 'ஏழு பிறப்பினும்' எனப் பொதுப்படப் புகன்றுள்ளார். இப்பிறவியில் மட்டும்இன்றி, எழுகின்ற பிறப்பிலும் எதிர் வரும் பிறப்பு-ஆவது மறுமை) தீயவை தீண்டா என எதிர்காலப் பயன் உணர்த்துதலாகவும இத்தொடரைப் பொருள் கொள்ளும்படி அமைத்த ஆசிரியர் திறம் அறிந்து மகிழ்தற்குரியது இப்பொருள் கோடற்கண் 'எழுபிறப்பு' வினைத் தொகையாக அமைதல் தெளிவு.

'அறிவறிந்த மக்கள்' என்று முதற்பாவின்கண் எடுத்த ஆசிரியர் இதனுள் 'பண்புடை மக்கள்' என்று அடை கொடுத்தமை, அறிவும் உடையராதலே நன்மக்கள் இலக்கணம்' என்று வரையறை செய்தலை விளக்கும் 'அரம்போலும் கூர்மையரேனும் மரம் போலவர் மக்கட் பண்பில்லாதவர்' என்பதும் ஆசிரியர் திருவாக்கு

நல்ல மக்களாக வளர்த்து, அன்னோரைப் புகழுக் குரியவராக ஆக்கி நல்லியல்புகளை வளர்ப்பவர்க்கு என்றும் இடர் இல்லை என்பதனை இக்குறள் இங்ஙனம் தெளிவுறுத்துகின்றது. பண்பில்லாத அறிவு உலக ஆக்கத்திற்குச் சிறிதும் உதவாது என்னுங் கருத்தும் இதனுட் புதை பொருளாக உள்ளது எனலாம்.

All the seven births no evil befalls one who is blest with good and unstained children.

(வி. ஆர். ஆர். தீட்சிதர்)★

அமிழ்தினும் ஆற்ற...

திரு. பண்டித. இராம மீனுட்சிசுந்தரனுர்.
எம். ஏ , எம். ஈ. எஸ் ,
'குறள் குடில்' கோவை-3.

குறள்-4. "அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்" (64)

தம் மக்கள் தம் சிறுகையால் அளாவிய கூழ் அமிழ்தினும் ஆற்ற இனிப்பூட்டுவதே; ஐயமின்று.

தம் மக்கள்—தாமே பெற்ற மக்கள்; (தம்) சிறுகை - தம்முடைய சிறிய வடிவு கொண்ட கையினுல்; அளாவிய - பிசைந்து குழப்பிய; கூழ் - உண்டியாகிய பண்டம்; அமிழ்தினும் - இறவாமல் நிலை பெறுத்தும் வீரியமும் இனிமைச்சுவையும் பெற்றுள்ள அமிழ்தைக் காட்டிலும்; ஆற்ற—கூடுதலாக நிரம்பிய; இனிதே - இனிமை பயப்பது உறுதி: ஐயமின்று.

[பக்கம் ஏழில் காண்க]

[பக்கம் ஐந்தின் தொடர்ச்சி]

விளக்கம்: இக்குறளில் 'அவர்' என்ற சொல் ஐயத்திற்கு இடந்தந்து நிற்கின்றது.பரிமேலழகரும் மணக்குடவரும், இதற்கு 'அம்மக்கள் என்று பொருளுடைப்பர்.'அப்பெற்ருேர்' என்பதே இதன் பொருளாகும் என்பது திரு. வி. க அவர்களின் கருத்து இதுவே பொருத்தமெனத் தோன்றுகின்றது.

ஈண்டு 'பொருள்' என்பது மக்கட் பேற்றினையே குறிக்கின்றது. பெற்ருேர்க்குத் தம் மக்களே செல்லமாவர் என்பதை நிறுவிக் காட்டுறதற்குப் பல சான்றுகள் வேண்டுவதில்லை வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கினுல் பெற்ருேர் தம் மக்களைத்தம் உயிரினும் பெரியதாக மதிப்பது புலனுகும் ஐங்குறு நூறு, 'பொன் போல் புதல்வர்' (செய். 265) என்றும், புற நானூறு, 'பொன் போற் புதல்வர்' (செய். 9) என்னும் கூறுவதை அறிக. பாரதியாரும், 'கண்ணம்மா-என் குழந்தை' என்ற பாடலில், 'செல்வக் களஞ்சியம்', 'பிள்ளைக்கனியமுது', பேசும் பொற்சித்திரம்', 'கண்ணின் பாவை' என்றெல்லாம் குழந்தையைப் போற்றிப் புகழ்வதை ஈண்டு நினைக.

வினை-நல்வினை, தீவினை; கர்மத்தைக் குறிக்கின்றது. நல்வினை—பழி பிறங்காதது; பண்புடையது. தீவினை-பழி பிறங்குவது; பண்பில்லாதது. இந்த மெய்ப்பொருள் கருத்து, கால்வழி இயலாலும் (Genetles) உறுதிப் படுகின்றது. விபரம் 'வாழையடி வாழை' என்ற நூலில் காண்க.

கருத்து:- பெற்ருேர்க்குத் தம் மக்களே செல்வமாகும். அச்செல்வம் அவரவர் செயலால் உண்டாகும். நன் மக்கள் தோற்றத்திற்குத் தாய் தந்தையர் நல்லொழுக்க முடையவராதல் வேண்டும்.

Men will call their sons, their wealth, because it blows to them through the deeds which they perborm on their behalb. (R. D.) ★

[பக்கம் ஆறின் தொடர்ச்சி]

பெற்ற பிள்ளைகளுள் பெண் ஆண் என்னும் பால் வேறுபாடு கருதாது, தாம் பெற்றமை கொண்டே பெருமிதம் முற்றி; குழந்தைப் பருவத்தில், அண்ணுரிடம் நிகழும் குதலை, மழலை முதலியன கேட்டும், பொன்போன்று அழகு மிளிரும் மேனி வனப்புக் கண்டும், மலரினும் மெல்லியதாய் மெத்தென்று இருக்கும் அந்த இளம் உடம்பைத் தூக்கி யணைத்து உராய்ந்தும், தாய்ப்பாலின் மணம் கமழும் அக்குழந்தை களின் தாரைப்பூ போன்ற வாயும், மணப் பொருளாடிய குஞ்சிக் குழல் (தலைமுடி) கொண்டை உச்சி முகர்ந்தும், பிஞ்சு உடம்பின் பல இடத் திலும் முத்தமிட்டுக், கொஞ்சியும், ஐம்புலன் நுகர்ச்சியினையும் காதல் பிள்ளைகளிடம் பெறுதல்; ஆறு அறிவும் நல்லவிதமாக சேரப்பெற்றவர் களிடம்தான் கூடும் என்ற உண்மையை வலியுறுத்தும் நோக்கத்தோடு தான் மக்கள் என்னும் சொல்லை ஆசிரியர் இங்கேதந்துள்ளார். புதல்வர் என்று கூறிப்பெண்குழந்தைகளை ஒதுக்கிவைக்கவில்லை மாதானுபங்கி (வள்ளுவரின் பெயர்களுள் ஒன்று)

வாழ்வில் பலபடிகளிலும் உள்ள பெற்றோர் தம் குழந்தையிடம் ஐம்புலநுகர்ச்சி இன்பங்கொள்ளுதல் பொதுவான உண்மை. இத்துடன் சிறப்பு உண்மையும் அறிவிப்பதற்காகத்தான் 'தம்' என்னும் அடை மொழியையும் சேர்த்துள்ளார் அது என்ன? - குழந்தையின் செய்கை, தனித்தனியே; ஒவ்வொன்றின் விளைநிலத்தின் தரத்திற்குத் தக்கபடி மாறுபடுவதை உலகில் காண்கிறோம். குழந்தை, அங்காந்து அலறிக், கை கால் ஆட்டிக், கண்சிமிட்டிப், புன்னகை பூத்துப்; புலன் அறிவு முற்ற முற்ற ஈடுபடும் மற்றுஞ்சில முயற்சிகளிலும், குழந்தைக்குக் குழந்தை வேறுபடுவது இயற்கை அல்லவா? எனவே, கூழினை அக்குழந் தை அளாவும் செய்கையிலும் வேறுபாடு தோன்றவே செய்யும்.

தன் உடலின் சிறுகித் தசையாய், நரம்பாய், குருதியாய் எலும்பாய் எல்லாவற்றுக்கும் மேலாகத் தன் அறிவாய் உணர்வாய்த் தன்னில் இருந்து தோன்றியஓர் உடல், தவழ்ந்து தன்முன் இயங்குவதைக்கண்டு பெருமிதம் கொள்ளும் போது, அக்குழந்தையின் உடலில்சற்றே நோய்க் கூறு தென்பட்டாலும். அதைத்தன் உடலாக மதித்து அருவருப்பு சிறி தும் கொள்ளாமல் அணைத்துக் கொள்ளும் ஒருவர், இன்னொருவருடைய பிள்ளையின் சிறங்கையும், மூக்கு ஒழுகுவதையும் கண்டவுடன் அக் குழந்தையைத் தொடவும் கூசுவார் அல்லவா! (மக்கள் பணிபுரியும் பொது நலத்தொண்டர்களை இது குறிக்கவில்லை) எனவேதான் 'தம் மக்கள்' என்று தனியாகப் பிரித்து சிறப்பித்து ஓதினார். இல்லாவிடில்,

"அமிழ்தினும் ஆற்ற இனிதே புதல்வர்
சிறுகை அளாவிய கூழ்"

[பக்கம் எட்டில் காண்க]

[பக்கம் ஏழின் தொடர்ச்சி]

என்று இசைத்திருப்பார் தன்குறட்பாவை. (இதன் விரிவை எமது "தம் மக்கள்" என்னுங் கட்டுரையில் காண்க.)

இனி, அமிழ்தம் உண்டவர்கள் நீண்ட காலம் வாழுவார்கள். குழந்தை பிசைந்ததை உண்ணுவதால் உண்டாகும் மகிழ்ச்சியால் நம் உடல் தளிர்த்து, உற்சாகம் அடைவதால், சிறிதளவு உயிர் நீட்சியும் ஏற்படலாம் எனினும் உறுதியில்லை. ஆகையால், அமிழ்தத்தின் மற்றொரு தன்மையை மட்டிலும் எடுத்துக் கொள்கிறார் பொய்யில்புலவர் (வள்ளுவர்) இனிமை,என்பது நாவிடத்து;மனம் அதில் கருத்து ஊன்றுகிற அளவுக்குத்தான் அது இனிமை கருதுகிறவர்களுடைய பழக்கங்களுக்கு ஏற்றபடி இனிமையும் மாறுபடக் கூடும் அல்லவா?—என் பிள்ளையின் சிறுகை அளாவிய கூழ், இன்னொருவருக்குக் கசப்பாக இருக்கலாம்; அல்லது புளிப்பாக இருக்கலாம்; அல்லது நாற்றம் அடிப்பதாகத் தோன்றலாம்.

அமிழ்தம் உண்ட வர்கள் அமரர்கள். (தேவர்கள்) அவர்களை நாம் கண்ணால் காணவில்லை; கருத்துக் கொண்டல்லவா எண்ணி உணருகிறோம்.அதுபோலவே, அன்புப் பெருக்கால்,அமிழ்தம் என்று எண்ணித் தம் குழந்தை அளாவிய கூழைச் சுவைக்கும் பெற்றோருக்கு, அந்தக் கருத்தளவுக்குத்தான் அதில் இனிமை தெரியும் உயிர் நீடிக்க வழியில்லை. உயிர் நீடிக்கும் என்றும் வள்ளுவர் எண்ணியிருப்பாரானால் அதையும் உட்படுத்திக் கூறும் வகையில்,

"அமிழ்தினும் ஆற்ற லதுவேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"

என்றல்லவா இந்தக் குறட்பா உருக்கொண்டிருக்கும்?

ஆகவே, ''தம் மக்கள் சிறு பிஞ்சுக் கையினால் துழாவி, அளைந்து, பிசைந்து வைத்துள்ள உண்டியைக் கண்டு, பெற்றோர், அன்பு மேலீட்டால்; அமிழ்தம் உண்டவர்களின் சுவை விழைவுபோல் உள்ளத்தில் இனிப்பாகக் கருதிச் சற்றும் அருவருப்புறாமல், உண்ணுவர்'-என்பதே கருத்து. குழந்தையின் கைகள் பெற்றோருடைய கைகளே. உடம்போடு இணையாமல், தனித்து வெளியே விளங்கும் கைகள்.

அமிழ்தினும்—ஐந்தாம் வேற்றுமை உறழ்பொருள்.

கூழ் – உண்டி –"படைகுடி கூழ்....." மதுரை மாவட்டத்தே கன்னடிகர் இப்பொருளிலேயே இன்றும் வழங்குகின்றனர்.

Sweeter verily than ambrosia is the gruel s-oused and spattered by the tender hands of one's own children. (V. V. S.) ★

மக்கள்மெய் தீண்டல்...

திரு. க. ப. அருணாசலம். பி. ஓ. எல்.,
தமிழ் ஆராய்ச்சித்துறை,
கேரளப் பல்கலைக் கழகம், திருவனந்தபுரம்.

குறள்-5. "மக்கள்மெய் தீண்டல் உடற்குஇன்பம்; மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு" (65)

பொருள்:- உடலுக்கு இன்பம் குழந்தையின் மெய்யைத்தொட்ட அளவிலும், செவிக்கு இன்பம் அவருடைய சொற்களைக் கேட்ட அளவிலும் உண்டாகும்.

கருத்து.- குழந்தையின் உடலைத் தொடுதலும், அவர் சொற் கேட்டலும் இன்பம்.

விளக்கம்:- மனைத்தக்க மாண்புடையாளைத் துணைக்கொண்டு, கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறிந்து, குழந்தைகள் பெற்று,பின்னும் ஐம்புலனும் ஒண்டொடிக்கண்ணே உள என எண்ணி மயங்கிறானைப் பார்த்துச் சொல்லியது. துய்த்த அளவில் கிடைக்கும் துணைவியின் இன்பத்தைக் காட்டிலும்,தீண்டிய அளவிலேயே குழந்தையிடம் இன்பம் கிடைக்கும் என்ற கருத்துப்பட 'மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம்' என்றார். தொடுதல், உறுதல் என்று கூறாது 'தீண்டல்' என்று கூறிய அதனால், அரவு தீண்ட உடம்பில் நஞ்சு பரவுதல் போல, குழந்தையைத் தீண்ட இன்பம் உடலில் பரவுமாம். தானே தீண்டாது, குழந்தை தன் கைகளால் பெற்றோரின் உடலைத் தீண்டியது என்றலும் பொருந்தும்.

முறையான காதலியின் இன்பமொழி கேட்டுச் செவியின்பம் பெற்றவன், முறைக்கடங்காத (சோறு என்பதை சோச்சி; பால் என்பதைப் பாச்சி என்பது போல) குழந்தையின் மழலை கேட்டு இன்பம் அடைகிறான். செவி என்று ஓர் உறுப்பு இன்பத்தைச் சொன்னதனுன், ஏனை கண், வாய், மூக்கு இன்பங்களையும் குழந்தைதரும் என, ஒன்றினைக் கூறி மற்றவற்றைப் பெறவைத்தார். குழந்தை பெற்றோரின் எச்சம் எனப் பிறிதோர் இடத்தில் (குறள், 114) கூறினர் ஆதலின், குழந்தை காதலியின் அல்லது காதலரின் எச்சம் என்று கூறலும் தவறாகாது. ஏனெனில், காதலி தரும் காட்சி இன்பமும், தீண்டும் இன்பமும்,கேள்வி இன்பமும், இதழ் இன்பமும்,கதுப்பு இன்பமும் குழந்தையும் தருதலின்.

[பக்கம் பத்தில் காண்க]

குழலினிது...

திருமதி. மண்டோதரி கணேசன். எம். ஏ; பி. டி,
தமிழ் விரிவுரையாளர்,
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி, சேலம்-4.

குறள்-6. "குழல்இனிது; யாழ்இனிது' என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்" (66)

தமிழுக்கேயுரிய சிறப்பு 'ழ' கரத்தைப் பெற்றுத் தமிழர்க்குரிய துளைக் கருவியும், நரம்புக் கருவியுமாக விளங்கும் குழலோசையும், யாழொலியும் பெரிதும் இன்பம் பயக்கும் என்று எவரேனும் கூறுவர் எனில், அவர் தம் மக்களின் மழலைச் சொல்லினைக் கேட்டுணராதவர் என்பதை நன்குணரலாம் எனக் கூறுகின்றார். சில சொற்களையே கொண்டு பெரும் பொருளை உணர்த்தவல்ல வள்ளுவர், சொல்லுஞ் சொல்லை, அச்சொல்லை வெல்லுஞ் சொல் இன்மையறிந்து, மக்களுக்குத் 'தம்' என்ற இன்றியமையா அடைமொழியினை அளித்துள்ளார். குழந்தைகள் யாவருமே பொருளுணர்த்தா மழலை பேசினும், அவை நமக்கின்பம் பயந்தாலும், நம் ஊனும், உயிரும் பெற்று விளங்கும் நமக்கேயுரிய செல்வத்தின் மழலைச் சொல் பெரிதும் இன்பம் பயக்குந் தன்மையை, உலகியலறிந்து வள்ளுவர் அமைத்திருக்கும் வகை அறிந்து போற்றத் தக்கதாகும். மனித இனம் 'தன்' என்னுஞ் சொல்லுக்கு எத்துணை ஏற்றம் அளிக்கிறது என்பதை நன்குணரலாம். 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு' ஆக இருத்தல் போன்று தான் ஈன்ற செல்வத்தின் சொல்லமையா ஓசைகூட குழலினையும் யாழினையும் வென்று விடுகிறது.

[பக்கம் பதினொன்றில் காண்க]

[பக்கம் ஒன்பதின் தொடர்ச்சி]

மற்றொரு பொருள்:- தந்தை மகனுக்கு மெய்யறிவு ஊட்டி அவையத்து முந்தியிருக்கச் செய்தனன். மகன் அவையத்து இருந்து கேளாரும் வேட்ப மொழிகின்றான். அவ்வுரை கேட்ட தந்தையின் செவி, இன்பம் பெறுகிறது. மகனின் உரையைக் கேட்ட அளவில் செவிக்கின்பம் என்பதுபட 'மற்று அவர் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு" என்றார் என்றலும் பொருந்தும். மெய்தீண்டல் (மெய் உணர்தல்) மகன் தொழிலாகவும், சொற்கேட்டல் தந்தை தொழிலாகவும் கொள்க. மெய்தீண்டல் **காரணமாயும்**, இன்பம் பயக்கும் சொல்லாற்றல் **காரியமாயும்** அமைந்தன. தன் மகன் மெய்யுணர்தல் மட்டும் போதாது; மெய்யுணர்ந்து பேசுதலும் வேண்டும் எனத் தந்தை அவாவியது

The delight of body is the touch of one's children. The delight of the ear is their lisp.

(வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர்) ★

தந்தை மகற்கு...

திருமதி. இரா. ஞானபுஷ்பம் எம். ஏ,
தமிழ்ப் பேராசிரியை,
மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரி,
மதுரை-2.

குறள்-7. "தந்தை மகற்குஆற்றும் நன்றி, அவையத்து
முந்தி இருப்பச் செயல்" (67)

சொற்பொருள்:- தந்தை மகற்கு ஆற்றும் நன்றி-ஒரு தந்தைதான் பெற்றெடுத்த மகனுக்குச் செய்யும் நன்மை யாவது; அவையத்து-கல்வி கேள்விகளால் நிரம்பியவரது அவையின் கண்; முந்தி இருப்பச் செயல்-அங்கு இருப்பார் எல்லோரினும் தன் மகனே முற்பட்டு இருக்குமாறு செய்வதுதான்.

[பக்கம் பனிரெண்டில் காண்க]

[பக்கம் பத்தின் தொடர்ச்சி]

மக்கட் பேற்றின் சிறப்பினைப் புலப்படுத்தும் செந்நாப் போதார், அவரால் பெற்றோரின் புலன்கள் எய்தும் இன்பத்தை வகைப்படுத்திக் கூறுகின்றார். சிறுகை அளாவிய கூழ் அமிழ்தினும் இனிதாயிருத்தலை யும், மக்களின் மெய்தீண்டல் உடற்கின்பம் பயத்தலையும், அவர் சொற் கேட்டல் செவிக்கு இன்பம் அளித்தலையும்,அவர் தம் மழலைச்சொல் குழலை யும், யாழையும் வெல்லுந் தன்மையுங் கூறியுள்ளார். இதற்கு உரை யெழுதப் போந்த பரிமேலழகர், 5-ஆவது குறளினை, "மக்களது மழலைச் சொல்லேயன்றி, அவர் கற்றறிவுடையராய்ச் சொல்லுஞ் சொல்லும் இன்பமாகலின் பொதுப்படச் 'சொல்' என்றார்"என்று விளக்கி,இனிமை மிகுதி பற்றி மழலைச் சொல்லைச் சிறப்பு வகையானும் கூறியவாறு என விளக்கி யிருத்தலே மக்களின் மழலைச் சொல்லின் இனிமை மிகுதியை உணர்த்துகின்றது.

வள்ளுவர் இவ்வதிகாரத்தில் யாண்டும் 'மக்கள்' என்ற சொல் லையே பயன்படுத்த, உரையெழுதப் போந்த பரிமேலழகரோ, வடநூன் மரபுப்படி, புதல்வரைப் பெறுதோர் 'புத்' என்னும் நரகத்திற்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தோடு, இரு பாலார்க்கும் உரிய 'மக்கள்' என்னும் பொதுச் சொல்லை விடுத்துப் 'புதல்வரைப் பெறுதல்' என்னும் பெயர் சூட்டியிருத்தல், வள்ளுவர் நோக்கத்தைத் தெளிவுறுத்துவதாக அமையவில்லை. பாண்டியன் அறிவுடை நம்பி; மயக்குறு மக்களை இல் லோர்க்குப் பயக்குறை இல்லைத் தாம் வாழும் நாளே' என வாழ்வின் இட்டு நிரப்ப முடியாக் குறையாகத்தான் குறிக்கின்றாரே யொழிய, இறந்தபின் 'புத்' என்னும் நரகத்தில் வீழாமல் இருக்கும் பொருட்டுப் புதல்வரைப் பெறவேண்டும் எனக் கூறவில்லை.

இவையனைத்தும் ஈண்டு உய்த்துணரற்பாற்று.

"The pipe is sweet, the lute is sweet," say those who have not heard the prattle of their own children. (R. D.) ★

கருத்துரை:- ஒரு தந்தை தன் மகனுக்குச் செய்யும் நன்மை-செய்ய வேண்டிய நன்மை, கற்றவர் அவையிலே கல்வியில் வல்லவனாக அவன் முற்பட்டிருக்குமாறு செய்வதாகும். அதுவே தந்தையின் கடமை.

விளக்கவுரை:- இப்பாடல் தந்தையின் கடமை என்ன என்பதை விளக்கி நிற்கிறது. மகனைப் பெற்றுவிட்டதற்காக அவனுக்குச் சோறு போட்டு அவனது உருவத்தை வளர்த்தல் மட்டும் போதாது. அவனது உள்ளத்தை வளர்ப்பதும் மிக இன்றியமையாததாகும். இதனால்தான் பொன்முடியாரும்,

"சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே"

என்று கூறினர். குழந்தைகளை எப்படியேனும் வளர்ப்பது; சிறந்தவனாக வளர்ப்பது என்ற முறைகள் உலகிலே காணப்படுகின்றன. நாளை தன் குடியையே தாங்கப் போகின்ற ஒருவனை நன்றாக வளர்த்திருப்பின், அவனால் வீட்டுக்கும் நாட்டுக்கும் நலன் விளையும். மகனுக்கு ஒரு தந்தை திரண்ட பொன்னையும் பொருளையும் தேடி வைக்க வேண்டுமென்று கவிஞர் கூறக்காணோம். வெள்ளத்தாலும், வெந்தழலாலும், கள்வராலும் கவரத்தக்க பொருட் செல்வத்தைக் காட்டிலும், மற்றவர்க்குக் கொடுக்கக் கொடுக்கக் குறையாது விரிந்து விளங்கும் கல்விச் செல்வத்தைத் தான நல்ல தந்தை தன் மகனுக்கு நல்க வேண்டும். அம்மகனுக்குக் கல்வியே வாழ்வின் வழிகாட்டியாக அமையும்.

"மனைக்கு விளக்கம் மடவார் மடவார்
தமக்குத் தகைசால் புதல்வர் காதல்
புதல்வர்க்கும் கல்வியே"

என, கல்வியே ஒருவனுக்கு விளக்கமாகக் கூறப்படுதல் பிறவிடத்தும் காணலாம்.

கல்வியில் வல்லவனாக்கிக் கற்றோர் அவையில் இருக்கச்செய்யவேண்டும் என்றுகூடக் கூறாது, அக்கற்றோர் அவையிலே இவனையே எல்லோரிலும் வல்லவனாக இருக்கச் செய்யவேண்டும் என்பதையே 'அவையில் முந்தி யிருப்பச் செயல்' என்றதன் மூலம் விளக்குகிறார் குறளாசிரியர். உயர்ந்ததாகவே எண்ணவேண்டும் என்பதன்றோ நம்வள்ளுவர் சிந்தனை.

வீடும் நாடும் சிறக்க நல்ல நல்ல வழி துறைகளை வகுத்துக் காட்டுபவர் வள்ளுவர். நாட்டுக்கு அடிப்படை வீடாதலின், இங்கே, ஒரு வீடு சிறக்க ஒரு தந்தை தன மகனைக் கல்வியில் இணையற்றவனாகச் செய்ய வேண்டும் என்று கூறி அமைகிறார்.

The good the father can do his son is to make him occupy the first rank in an assembly

(V. R. R.)

தம்மின்தம் மக்கள்...

திரு. அ. தாமோதரன் எம். ஏ;
ஆராய்ச்சியாளர்,
கேரளப் பல்கலைக் கழகம்,
திருவனந்தபுரம்.

குறள்:-8. "தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மா நிலத்து
மன் உயிர்க்கு எல்லாம் இனிது" (68)

திருக்குறளை ஓர் அறவிலக்கியமாகக் கருதி கீதை, குர்ரான், பைபிள் போன்ற அறநூல்களுடன் ஒப்பிட்டுப் பேசிப் பழகிய நாம், அதனை மனிதவியல் (Anthropology) சமூகவியல் (Soeiology) கண்ணோட்டங்களில் அணுகி ஆராய இன்றளவும் முயலவில்லை. சிறப்பாக, இல்லற வியலும் அதனோடு இயைந்த பிறபகுதிகளும் இக்கண்ணோட்டங்களில் கருத்தூன்றிக் கருதப்பட்டு மறுபரிசீலனை செய்யப்படின், சமூதாய அமைப்பு (Social Organization)ப் பற்றித் தமிழரின் கோட்பாடுகளை வள்ளுவர் வழி நின்று அறிய-விளக்க இயலும் என்ற திண்ணிய நினைவோடு இக்குறட் கருத்தை எண்ணுதல் நலம் பயக்கும். இம்முறை நியாயமாகத் தோன்றி ஒருவர் செயற்பட்டால் அதன் விளைவு விழுமிய பயனைத்தரும் என்பது ஒரு தலை.

சமுதாய அமைப்பு மனித இனத்தின் நாகரிகப் பண்பாடுகளின் வளர் நிலைப்போக்கு என்று கருதின், அச்சமுதாய அமைப்புக்குரிய அடிக்தளம் உறவுமுறை (Kinship) ஆகும். செறிவுறு உறவுமுறை நிலையுடைக் குடும்ப அமைவினாலும், நிலையுடைக் குடும்ப அமைவு முறைபெறு மண வாழ்வாலும் நிர்ணயிக்கப்படுகிறது எனலாம். எனவே, மணமுறையும் குடும்ப அமைவும் இணைந்து, மக்களின் வாழ்வின் முதனிலையில் உருவாக்கப்படும் பண்பாட்டின் உயர் நிலைகளாக நின்று சமுதாயம் அமைந்ததுஎனல் பொருந்தும். இச்சமுதாய அமைப்புநிலைத்து-செழித்து வளர்தல் இடையறாத இனவிருத்தி என்ற தொடர் நிகழ்ச்சி (Continuous process) க்கண் அடங்கியுள்ளது என்பது காலம் வென்ற உண்மை. நாகரிக வளர்ச்சிக்கு உதவும் இனவிருத்தியே பண்புமிகு சமுதாய அமைப்பை உருவாக்கும் என்பதை வள்ளுவர்'அறிவறிந்த மக்கட்பேறு' என்று குறிப்பிட்டுள்ளார். இதுமீண்டும் "தோன்றிற் புகழொடு தோன்றுக" என வற்புறுத்தப்பட்டுள்ளது. இதனாலேயே வள்ளுவர் இல் வாழ்க்கை, வாழ்க்கைத்துணைநலம், மக்கட்பேறு, அன்புடைமை., என்று தொடங்கி, தொடர்புற அமைத்து உறவுமுறைக் குடும்ப அமைவு, மண

[பக்கம் பதினான்கில் காண்க]

[பக்கம் பதின்மூன்றின் தொடர்ச்சி]

வாழ்வு: சமுதாய அமைப்பு என்பன பற்றிய தமது கருத்துக்களைக் குறிப்பிட்டுச் செல்கிறார்.

சமுதாயம் காலத்தோடு இயைந்து நின்று நாளுக்குநாள், தலைமுறைக்குத் தலைமுறை, பண்பாலும் அறிவாலும் மேன்மேலும் நனி வளர்ந்து செழிப்புற வேண்டும். செழிப்புறவே, சமுதாயம் புகழுறும்; பொலிவு பெறும்; மேம்படும். இக்கோட்பாட்டினை உள்ளுறுத்து உரைப்பதே இக்குறட்பாவாகும். ஆகவே, தம்மக்கள் தம்மைவிட அறிவுடையர் ஆதல் மாநிலத்தில் நிலைபெறு உயிர்கள் அனைத்திற்கும் இனிது என்று இக்குறட்பாவிற்குப் பொருள் காணலாம். இதனால் சந்ததி வளர வளர அறிவு வளம் மேம்பாட்டுச் சிறத்தல் இயல்பு; இன்றியமையாததும் கூட என்பதே இதன் கருத்து. சமுதாயச் சிந்தனையும்,

"உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றின்
புண்ண துணர்வார்ப் பெறின்"..எனவும்,

"அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதினோய்
தன்நோய் போல் போற்றக்கடை"...எனவும்

பின்னர்க் குறித்துள்ளமையும் கருதப்படின், இங்கு 'மாநிலத்து மன்னுயிர்' என்பது நில உலக அனைத்துயிர்களையும் தொகுத்துரைத்தது எனல் பொருந்தும். இக்குறட்பாவிலும், இவ்வதிகாரத்துப் பிற பாடல்களிலும் 'தம்' 'தன்' என்று உரிமையுறவுச் செறிவினை வள்ளுவர் வலியுறுத்துகிறார். வலியுறுத்தவே, தம் சமுதாய அமைப்பில் மகவேற்பு முறை (Adoptive system) யினை இணைக்க அவர்விரும்பினார் அல்லர்போலும்.

இனி இக்குறட்பாவிற்கு வேறு வகையில் காணும் உரைகளை இங்குக் குறிப்பிடுதல் கருத்து முழுமையுறுதலோடு, கருத்து ஒப்புநோக்கிற்கும், கருத்து வன்மை மென்மைகளை ஆய்ந்தறிதற்கும் பயன்படும்.

தம்மக்கள் அறிவுடையராதல் மாநிலத்து மன்னுயிர் அனைத்திற்கும் தம்மைவிட இனிமை பயக்கும் எனப் பொருளுரைத்து, இதனால் மக்கட்பேறு பெற்றோர்க்கு மட்டுமன்றிப் பிறருக்கும் பயன் படுதல் வேண்டும் என்பதுடன், அதுவே சீரியது என்பதைக் குறித்தது இக்குறள் எனலாம்.

இனி, தம்மக்கள் தம்மினும் அறிவுடையராதல் மாநிலத்து அனைத்துப் பெற்றோர்க்கும் (மன்னுயிர்க்கு) இனிது என்று பொருள் கூறி மக்கட் பேற்றினால் பெற்றோர் பெறும் பயன் இதனால் உரைக்கப்பட்டது எனினும் அமையும்.

மேலும் மாநிலத்தில் எல்லாப் பெற்றோர்க்கும் தம்மக்கள் தம்முள் தாம்-ஒருவர்க்கொருவர் அறிவுடையராதல் இனிது எனப் பொருள் காணலும் அமையும்.

It is pleasant to all the powerful creatures of the great earth that their children should plossess more knowledge than themselves. (R. D.) ★

ஈன்ற பொழுதின்...

திருமதி. சா. இராசம்மாள்,
தூத்துக்குடி,

குறள் 9. "ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும், தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்" (69)

சொல்விளக்கம்:- ஈன்றபொழுதின்—பெற்று எடுத்த காலத்தில். பெரிதுவக்கும்—இணையிலா மகிழ்வெய்தும்; தன்மகனை—தன் பிள்ளையை; சான்றோன் - அறிவிற் சிறந்தவன்; என - என்று (கற்றறிந்த சான்றோர்கள் கூற)கேட்டதாய்-கேள்வியுறுகின்ற தாய்; பெரிது உவக்கும்—மிகுந்த மகிழ்ச்சியை அடையும்.

கருத்து: தனக்கு மகன் பிறந்திருக்கிறான் என்று கண்டவுடன், பெற்றெடுத்த சிரமத்தையும் மறந்து, எல்லையிலா மகிழ்ச்சியடைவாள் தாய். அதிலும் தன்மகனை "அறிவாளி" எனக் கற்றறிந்தோர் அவையில் கூறும்பொழுது, அதைக் கேட்டு, அவனைப் பெற்றெடுத்த போது தான்அடைந்த மகிழ்ச்சியைவிடப் பன்மடங்கு அதிகமான மகிழ்ச்சியை அத்தாய் அடைவாள்.

சிறப்புரை. "பெற்றுப் பிழைத்தால் போதும்" என்பதுஆன்றோர் வாக்கு. உயிருக்கே இடுக்கண் நேரிடும் என்ற ஐயமிருப்பினும்,தாயானவள் குழந்தையைக்கண்டு களிக்க வேண்டும் என்ற பேரவாவால் உந்தப்பட்டு, தவமிருந்து பெற்றெடுக்கிறாள். அவ்வாறு பெற்றெடுத்ததும், அக்குழந்தையைக் கண்டு பெற்ற சிரமத்தையும் பொருட்படுத்தாது அகமகிழ்கிறாள். அதைவிட தன் மகன் சான்றோர்களால் "சத்தியவந்தன்; அறநெறியாளன்; அன்பும்பண்பும் ஒருங்கே நிறைந்தவன்" என்று போற்றிப் பாராட்டப்படும் பொழுது,அத்தாயானவள் மிகுந்த களிக்கடலிலே ஆழ்ந்து விடுகின்றாள். சுமந்து பெற்ற தாயை மகிழ்ச்சியடையச் செய்வது பிள்ளையின் கடன். துறவியும் தாயை மகிழச் செய்வது மரபு என்பது திருவள்ளுவர் கருத்து.

ஈன்ற பொழுதினும், தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய் பெரிது உவக்கும் என்ற கருத்திற்கு இயைவான ஒப்புமைப் பகுதிகள் நந்தமிழ் நூலின்கண் பலவுள. இரண்டொன்றை மட்டும் இவண் நோக்குவோம்:

"மீனுண் கொக்கின் றூவியன்ன
வானரைக் கூந்தன் முதியோள் சிறுவன்

[பக்கம் பதினாறில் காண்க]

மகன் தந்தைக்கு...

திரு. செ. யோகசுந்தரம் எம். ஏ , எல் டி ,
பேராசிரியர், மொழித்துறைத்தலைவர்
ஊரிஸ் கல்லூரி, வேலூர்.

குறள்-10. "மகன் தந்தைக்கு ஆற்றும்உதவி 'இவன்தந்தை
என்நோற்றான் கொல்!' எனுஞ்சொல்" (70)

தந்தைக்குப் புகழ் உண்டாகுமாறு தனயன் ஒழுகுதல் வேண்டு மென்பது இதன் கருத்து.

விளக்கவுரை: 'மக்கட் பேறு' என்னும் இவ்வதிகாரத்தின் ஏழாம் குறளில், 'தந்தை மகற்கு ஆற்றும் நன்றி' என்றும், பத்தாம் குறளில் 'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி' என்றும் வள்ளுவர் அருளிச் செய் திருப்பதைச் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். 'நன்றி' 'உதவி' என்னும் இவ்விரு சொற்களுக்கும் நெருங்கிய பொருள் ஒற்றுமையிருப்பினும், ஏதோ சிறு வேற்றுமை விளங்க வேண்டு மென்றே ஆசிரியர் இச்சொற் களைப் பயன்படுத்தி யிருக்க வேண்டும் என எண்ண வேண்டியுளது. 'நன்றி என்பது நன்மை என்னும் பொருளது. மகன் குழந்தைப் பருவத் தினனாக, சிறுவனாக, தன் குறையறியாப் பருவத்தினனாக, இருக்கும்

[பக்கம் பதினேழில் காண்க]

[பக்கம் பதினைந்தின் தொடர்ச்சி]

களிறெறிந்து பட்டன னென்னு முவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்
நோன்கழை துயல்வரும் வெதிரத்து
வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே" புறம். 277

"மற்றவன் சொன்ன வாசகம் கேட்டலும் மகனைப்
பெற்ற அன்றினும் பிஞ்ஞகன் பிடித்த அப்பெருவில்
இற்ற அன்றினும் எறிமழுவாளவன் இழுக்கம்
உற்ற அன்றினும் பெரியதோ ருவகையன் ஆனான்"
—கம்ப, அயோத், மந்திர, 42

குறிப்பு. தானாகவே அறிவாளாயினும், பிறர்சொல்லக் கேட்பதி லேயே இன்பமும் உண்மையும் இருத்தலின், "கேட்டதாய்"என்றகருத்து பெண்ணுயர்வு தருதல் காண்க —— ஆசிரியர்.

Joy mother feels more than when her son she weaned, at his fair renown.
(எஸ். எம். மைக்கேல்) ★

[பக்கம் பதினாறின் தொடர்ச்சி]

போது, தந்தை அவனைக் கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்தவனாகச் செய்தல் வேண்டும். நல்லோர் இணக்கத்தை நாடுமாறு செய்தல் வேண்டும். அறவோர் அவையத்து அலங்கரிக்குமாறு செய்தல் வேண்டும். இவ்வாறு செய்தலன்றி, அவனுக்குப் பொன்னும் பொருளும், அணியும் ஆடையும், வீடும் நிலமும் வேண்டிய அளவு தேடிவைத்துச்செல்லும் தந்தை. தன்மகனுக்கு நன்றி ஆற்றும், நன்மை செய்யும் தந்தையாக மாட்டான் என்பது வள்ளுவர் கருத்தாகும். சான்றோனாக்குதல் தந்தைக் குக் கடனே,' என்னும் புறப்பாட்டின் பொருளும் இங்குச் சிந்தித்தற் பாலது.

இவ்வாறு கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறக்குமாறு செய்து. அறங்கூரவையத்து முந்தி யிருக்கும் நிலையைத்தான் எய்துமாறு தன்னைச் செய்த தந்தைக்கு மகன் கைமாறாகச் செய்ய வேண்டிய உதவி யாது? 'உதவி' உபகாரம் என்னும் பொருளது. நல்வழியில் பொருளை ஈட்டும் நிலையை அடைந்த நன் மகன், முதுமைப் பருவத்தை அடைந்த தன் தந்தைக்கு இனிய உணவும். எழில்மிகு உடையும், வசதியான வாழ்விடமும், வன் சொல்லன்றி இன் சொல்லும், நோய்வாய் பட்ட போது மருந்தும் கொடுத்துத் தன் கடனைக்கழிப்பதோடு அமையலாமோ எனின், அவ்வாறமைதல் கூடாது என வள்ளுவர் நினைக்கின்றார் போலும். கல்வி, அறிவு. ஒழுக்கங்களில் சிறந்து விளங்கும் மகனைப் பார்க்கும் உலகோர், 'இம்மகனைப் பெறுதற்கு இவன் தந்தைஎத்தகைய நற்றவம் செய்தனனோ?' என்று புகழ்ந்து பேசிக்கொள்ளுதல் வேண்டுமாம். இவ்வாறு உலகோர் புகழும் சொல்லை, 'இவன் தந்தை என் நோற்றான் கொல்'என்னுஞ்சொல்லை, உலகிடைஉலவவைப்பது மகனின் தலையாயகடமையாகும் என்பது வள்ளுவர் கருத்தாதல்வேண்டும். மகன் நல்லொழுக்கமின்றி வாழ்ந்துகொண்டே தந்தைக்கு எத்தகைய உதவி புரியினும் அது தந்தைக்கு மகிழ்ச்சியைத்தராது. தன் மகனைச் சான்றோன் எனக்கேட்டு உளம் மகிழும் தாய்போலத் தன் மகனைச் சான்றோன் என உலகம் புகழும் புகழுரையைக் கேட்பதையே தந்தையும் விரும்புகின்றான் என்பது வெளிப்படையாகும்.

மிருகண்டு முனிவர் மகப்பேற்றை விரும்பித் தவம் கிடந்தார். எத்தகைய மகனைப் பெற வேண்டுமென அவர் இறைவனை வேண்டினார்? அறிவுசான்ற, ஒழுக்கத்திலுயர்ந்த, பதினாறு ஆண்டே நிரம்பப்பெற்ற மார்க்கண்டேயனைப் பெற விழைந்தாரேயல்லாமல், அறிவற்ற, தீயொழுக்கம் நிறைந்த, நீண்ட ஆயுளைப்பெற்ற மகன் ஒருவனைப் பெற அவர் விரும்பவில்லை.

கம்பநாட்டாள்வார் சடாயுகாண் படலத்தில், சடாயு இராமனைப் புகழும் வாயிலாக:

'வல்லை மைந்த அம்மன்னையும் என்னையும்
எல்லையில் புகழ் எய்துவித்தாய்' என்றான் எனக் கூறி மகன்

கடமையை உலகிற்குணர்த்துகின்றார்.

[பக்கம் பதினெட்டில் காண்க]

இசைப்பாடல்.

பெற்றிடும் பேறுதன்னில்

(ஆசிரியர். ப. கண்ணன்)

இராகம்-கல்யாணி. தாளம்-ஆதி.

எடுப்பு.

பெற்றிடும் பேறுதன்னில் உற்றநன் மக்களேபோல்
பெருமைக்குரிய தேதுவோ?-புவியில் (பெற்றி)

தொடுப்பு.

கற்றறிமேதைமகன் கலையரங்கேறியவன்
நற்றமிழைப்பொழிந்தே நாவலனுய்த்திகழ்ந்தால் (பெற்றி)

படுப்பு.

தம்பொருள்என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம்வினையான்வரும் என்பது குறளே

முடிப்பு.

செம்பொருள்வருமாயின் சிறந்தனபயிராகும்
நம்முடனெவ்வுயிர்க்கும் நல்லின்பமேவளர்க்கும் (பெற்றி)

[பக்கம் பதினேழின் தொடர்ச்சி]

சிந்தாமணி ஆசிரியரும், 'எத்துணைத் தவஞ்செய்தான் கொல் என்றெழுந்துலகம் ஏத்த' எனச்சீவகனைப் புகழ்தலைக் காண்கின்றோம்.

எனவே,நன்மகன் ஒருவன் தன் தந்தைக்கு ஆற்றும் உதவி என்ன வெனின்,'இவனைப் பெறுவதற்கு இவன் தந்தை என்ன நற்றவம் செய்தனனோ?' என்று உலகோர் புகழும் சொல்லை நிலவச் செய்தலேயாம்.

What recompense the son can pay his father is the world's saying, what austere life his father must have lived to begot such a son.

(எம். எஸ். பூரணலிங்கம்) *

தமிழ் அன்னை உங்களை வேண்டுகிறாள்.

தமிழரின் தேடக் கிடைக்காத செல்வம் திருக்குறள். அதன் மணம் பரப்பும் அரிய பணியைச் செய்து வருகிறது 'குறள் மலர்'. தமிழ் மொழிப் பற்றும், தமிழ் நெறியில் பற்றும் உள்ளோர் தாமாக முன்வந்து 'குறள் மலர் வளம்பெற உதவவேண்டும்.

'குறள் மலர்' புரியும் அரிய பணியைப் பாராட்டி வாழ்த்துக் கூறுவோர் பலர், அவர்களுக்கு எமது நன்றி. எனினும் வெறும் வாழ்த்துதல் மட்டும் போதாது; செயலில் ஆதரவு தந்து உதவவும் வேண்டும்.

திங்கள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் தந்து, ஐந்து மலர்களைப் பெற்று உங்கள் நண்பர்களிடம் மலரைப் பரப்புங்கள். இது பெரிய அறம்; தமிழன்னைக்கு நீங்கள் செய்யும் திருப்பணி; தெய்வப்பணியும் ஆகும்.

இவ்வாறு செய்ய மனமிருந்தும், உங்கள் பொருளாதாரம் இதற்கு இடந்தராவிடில், உங்களுக்குமட்டும் திங்கள்தோறும் ஒரே'குறள் மல'ரைப் பெற்று ஆதரியுங்கள். அஞ்சல் செலவு உட்பட நீங்கள் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் **3**, முன்பணம் செலுத்தினல் போதும்; மலர் உங்களைத் தேடிவரும்.

தமிழர்கள் என்போர், தமிழ்ப்பற்று உடையோம் என்போர், தமிழர் வாழ்வு சிறக்கப் பணிபுரிகிறோம் என்போர் மனமுவந்து முன்வந்து 'குறள் மலரு'க்கு ஆதரவு தந்தருளுதல் வேண்டும்; தங்கள் நண்பர்களின் ஆதரவையும் தேடித்தந்து இப்பெரும் பணியில் தங்களின் நல் ஆதரவைச் செயல் மூலம் தந்தருளப் பணிவன்புடன் வேண்டுகின்றோம். இதைத் **தமிழ் அன்னையின்** வேண்டுகோளாக மதியுங்கள்.

இங்ஙனம்,

பதிப்பாசிரியர், **'குறள் மலர்'**

பழைய லேபர் யூனியன் கட்டிடம்,
நந்தி துருகம். உரிகம் அஞ்சல்,
கே. ஜி. எஃப், மைசூர் மாநிலம்.

திருவள்ளுவர் நூலகம்

தமிழன்புடையீர்!

வணக்கம். திருக்குறளில் அமைந்துள்ள ஆழ்ந்த கருத்துக்களை உலகிலுள்ள தமிழ் மக்கள் அனைவரும் அறிந்து உணரும் பொருட்டு நாம் "குறள் மலர்" வாயிலாக முறையாகத் தொண்டாற்றுகின்றோம் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

இத்தமிழ்ப் பணியின் முதல் திட்டமாக நாம் "திருவள்ளுவர் நூலகம்" என்னும் பெயரில் ஒரு சிறந்த நூலகத்தை நிறுவ உறுதி செய்திருக்கின்றோம். திருக்குறள் பற்றிய நூல்கள் எல்லாம் இந் நூலகத்தில் இடம் பெற்று ஒல்லும் வகையால் அறிவுப்பணி செய்வதே இந்நூலகத்தின் நோக்கமாகும். எங்கள் திட்டமும் நோக்கமும் நிறைவேற உங்கள் உதவியையும் ஒத்துழைப்பையும் விரும்பி வேண்டுகின்றோம்.

திருக்குறளைப் பற்றிய பல்வேறு பதிப்புக்கள், உரைகள், கட்டுரைகள், ஆராய்ச்சி நூல்கள், சிறுகதைகள், சொற்பொழிவுகள், நாடகங்கள், மொழி பெயர்ப்புக்கள், கவிதைகள், சிறப்பு மலர்கள் முதலியவை வெளிவந்திருக்கின்றன. உங்களால் இயன்ற அளவு, திருக்குறளைப் பற்றிய நூல்களை அன்பளிப்பாக வழங்கி எங்கள் திருக்குறள் பணிக்கு உதவவேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். உங்கள் அன்பளிப்பைக் காலத்தால் செய்த பேருதவியாக மதித்து நன்றியுடன் ஏற்போம்.

★

நூல்கள் நன்கொடையாக அனுப்பவேண்டிய முகவரி:-

ஆசிரியர், 'குறள் மலர்'

பழைய லேபர் யூனியன் கட்டிடம்,
நந்திதுருகம், உரிகம் அஞ்சல்,
கே. ஜி. எஃப், மைசூர் மாநிலம்.

செந்தமிழ் அச்சகம், சலகண்டபுரம். சேலம் மாவட்டம்.